# குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்றம், கரூர்.

**முன்னிலை:-** திரு.எஸ்.பி. பரத்குமார் எம்.பி.ஏ., எல்.எல்.எம்.,
நீதித்துறை நடுவர் எண்.1,கரூர்.

தமிழ் பராபவ வருடம், சித்திரை மாதம் 03 ஆம் நாள்,
2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ஆம் நாள், வியாழக்கிழமை,

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 258/2024**

| | | | |
|---|---|---|---|
| 1) | CNR Number | | **TNKR**02-002296-2022 |
| 2) | குற்றமுறையிடுபவர் மற்றும் எதிரிகள் பெயர், விலாசம் | | தமிழ்நாடு அரசுக்காக,<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>கரூர்நகர காவல் நிலையம்,<br>கா.நி. குற்ற எண்.206/2019.<br><br>எதிரிகளின் மீது இ.த.ச. 294(b), 323, 324 மற்றும் 506(2) ஆவது பிரிவுகளின் கீழ்.<br><br>// எதிரிகள் //<br>A1- திருவேங்கடம்,<br>த/பெ.ஜெயராமன்,<br>சிங்கம்பட்டி,<br>கடவூர்(தாலுகா),<br>கரூர் மாவட்டம்.<br><br>A2- ஆனந்த்,<br>த/பெ.ராமையா,<br>கண்டியார் தெரு,<br>கரம்பக்குடி,<br>புதுக்கோட்டை.<br><br>A3- மனோகரன்,<br>த/பெ.கந்தசாமி,<br>சிங்கம்பட்டி,<br>கடவூர்(தாலுகா),<br>கரூர் மாவட்டம். |
| 3) | குற்றம் நடந்த நாள் | | 16.03.2019 |
| 4) | முறையிட்ட நாள் | | 16.03.2019 |
| 5) | முதல் தகவல் அறிக்கை பெறப்பட்ட நாள் | | 16.03.2019 |
| 6) | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | | A1- 16.03.2019 |

<table>
<tr><td></td><td></td><td></td><td>A2- 16.03.2019<br>A3- எதிரி முன்பிணையம் பெற்றதால் கைது நடவடிக்கை இல்லை</td></tr>
<tr><td>7)</td><td>எதிரிகள் முதன் முதலாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் பட்ட நாள்</td><td></td><td>A1- 16.03.2019<br>A2- 16.03.2019<br>A3- 12.07.2019</td></tr>
<tr><td>8)</td><td>எதிரிகள் பிணையில் விடப்பட்ட நாள்</td><td></td><td>A1- 20.03.2019<br>A2- 20.03.2019<br>A3-எதிரி முன்பிணையம் பெற்றதால் கைது நடவடிக்கை இல்லை</td></tr>
<tr><td>9)</td><td>எதிரிகள் காவலில் இருந்த நாட்கள்</td><td></td><td>A1- 16.03.2019 - 20.03.2019<br>A2- 16.03.2019 - 20.03.2019<br>A3-எதிரி முன்பிணையம் பெற்றதால் கைது நடவடிக்கை இல்லை</td></tr>
<tr><td>10)</td><td>குற்றப்பத்திரிக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்</td><td></td><td>20.05.2024</td></tr>
<tr><td>11)</td><td>அரசு தரப்பு வழக்கறிஞர் நிலை-2,கரூர் அவர்களின் பெயர்</td><td></td><td>திரு. தண்டபாணி,</td></tr>
<tr><td>12)</td><td>எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் பெயர்</td><td></td><td>திரு. M. யோகேந்திரன்,</td></tr>
<tr><td>13)</td><td>எதிரிகளிடம் கு.வி.முச. 240-பிரிவின்படி கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td></td><td>17.12.2025</td></tr>
<tr><td>14)</td><td>நீதிமன்றத்தால் எதிரிகள் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டு</td><td></td><td>எதிரிகளின் மீது இ.த.ச. 294(b), 323, 324 மற்றும் 506(2) ஆவது பிரிவுகளின் கீழ்.</td></tr>
<tr><td>15)</td><td>எதிரிகளின் பதில்</td><td></td><td>எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்தார்கள்.</td></tr>
<tr><td>16)</td><td>சாட்சிகளை முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td></td><td><table>
<tr><td></td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா.1.</td><td>16.03.2026</td><td>16.03.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>25.03.2026</td><td>25.03.2026</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>25.03.2026</td><td>25.03.2026</td></tr>
</table></td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | | அ.சா.4 \| 25.03.2026 \| 25.03.2026 |
| 17) | அனைத்து பலதரப்பட்ட மனுக்களும் கோப்பிற்கு எடுக்கப் பட்ட நாள் -அவற்றிற்கான முடிவு, (மேல் நீதிமன்றங்களில் சேலஞ்ச் மனுக்கள் உட்பட) (routine மனுக்கள் கு.வி.மு ச. 317 போன்றவற்றை தவிர்த்து) | | இல்லை |
| 18) | எதிரிகளை கு.வி.மு.ச. 313(1) (ஆ) பிரிவின்படி வினவப் பட்ட நாள் | | 27.03.2026 |
| 19) | தலை மறைவு எதிரிகள் யாராவது இருப்பின் அவர் ஆஜரான நாள், ஆஜர் படுத்தப்பட்ட நாள் போன்ற விவரங்கள் | | யாருமில்லை |
| 20) | உயர் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள stay மனு மற்றும் அதில் பிறப்பிக்கப்பட்ட முடிவு | | ஏதுமில்லை. |
| 21) | வழக்கில் விசாரணைக்காக உத்தரவிடப்பட்ட நாள் | | 24.06.2024 |
| 22) | விசாரணை முடிவுற்ற நாள் | | 02.04.2026 |
| 23) | நடுவரின் தீர்மானம் | | எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் அரசுதரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை. |
| 24) | முடிவு | | எதிரிகள் குற்றம் சாட்டப்பட்டபடி குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்யப்பட்டது. |
| 25) | எதிரிகளுக்கு, இத்தீர்ப்பாணையின் இலவச நகல் வழங்கப்பட்ட நாள் | | அவ்வாறான சந்தர்ப்பம் எழவில்லை. |
| 26) | தீர்ப்பு நாள் | | 16.04.2026 |

**தீர்ப்புரை**

1) கடந்த 16.03.2019ம் தேதி 13.30 மணிக்கு கரூர் நகர காவல்நிலைய சரகம் கரூர் பேருந்துநிலையம் கீழ்புறம் உள்ள மணீஸ்பாரில் இவ்வழக்கின் சாட்சிகள் 2-3 ஆகியோர்கள் சாப்பிட்டுவிட்டு பில் கொடுத்தபோது தொகை அதிகமாக உள்ளதாக சாட்சி 3 கேட்டபோது இவ்வழக்கின் எதிரி A1 திருவேங்கடம் என்பவர் சாட்சி 3ஐ கையால் அடித்தும், சாட்சி 3 அவரது உறவினரான சாட்சி 1 சபியுல்லாகான் என்பவருக்கு போன் செய்தும் மேற்படி சாட்சி 1 மணீஸ்பாருக்கு வந்து எதிரி A1 திருவேங்கடத்திடம் ஏன் எனது உறவினர்களிடம் தகராறு செய்து கொண்டு இருக்கிறீர்கள் என்று கேட்டபோது எதிரி A1 சாட்சி 1ஐப் பார்த்து நீ யாருடா கேட்குறது தேவடியா புண்டாமகனே என்று கெட்ட வார்த்தையால் திட்டியும் கடையில் கிடந்த காலி பீர் பாட்டிலை எடுத்து சாட்சி1ன் தலையிலும் இடதுகையிலும் அடித்து சொற்பாகாயத்தை ஏற்படுத்தியும் மேற்படி பாரில் வேலை செய்யும் ஆனந்த் என்பவர் சாட்சி3ஐ மரக்கட்டையால் இடதுகால் பாதத்திலும், கழுத்தின் பின்பகுதியிலும் அடித்தது சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், தொடர்ந்து மேற்படி பாரில் வேலை செய்யும் மனோகரன் என்பவர் கடையில் கீழே கிடந்த மரக்கட்டையை எடுத்து சாட்சி2ஐ இடதுகால் கணுக்காலில் அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தி எதிரிகள் மூவரும் கையில் வைத்திருந்த பீர் பாட்டில் மற்றும் மரக்கட்டைகளை காட்டி சாட்சிகளைப் பார்த்து எங்ககிட்ட பிரச்சினை செய்தால் உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டியுள்ளார்கள். எனவே எதிரி A1, சாட்சி1ஐ கையில் வைத்திருந்த பீர் பாட்டிலாலும், சாட்சி 3ஐ கையாலும் அடித்து பீர் பாட்டிலை காட்டி கொலைமிரட்டல் விடுத்த எதிரியின் செய்கையானது சட்டப்பிரிவுகள் இ.த.ச. 294(b), 323, 324 மற்றும் 506(2) ஆவது பிரிவுகளின் படியும், எதிரி A2, சாட்சி 3ஐ கடையில் கிடந்த மரக்கட்டையால் இடதுகால் பாதத்திலும், கழுத்தின் பின்பகுதியிலும் அடித்து மரக்கட்டையை காட்டி கொலைமிரட்டல் விடுத்த எதிரியின் செய்கையானது சட்டப்பிரிவுகள் இ.த.ச. 324, 506(2) ஆவது பிரிவுகளின் படியும் எதிரி A3, சாட்சி 2ஐ கடையில் கிடந்த மரக்கட்டையால் இடதுகணுக்காலில் அடித்து மரக்கட்டையை காட்டி கொலைமிரட்டல் விடுத்த எதிரியின் செய்கையானது சட்டப்பிரிவுகள் இ.த.ச. 324, 506(2) ஆவது பிரிவுகளின் படியும் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக கரூர்நகர காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் காவல் நிலைய குற்ற எண்.206/2019ல் எதிரிகளின் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி குற்றப்பத்திரிக்கை இந்நீதிமன்றக் கோப்பில் இவ்வழக்காக சி.சி.எண்.258/2024 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

2) மேற்படி எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும், கு.வி.மு.ச. 207-

ஆவது பிரிவுபடி எதிரிகளுக்கு வழங்கப்படவேண்டிய அரசுதரப்பு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

3) எதிரிகள் மீதான குற்ற சாராம்சம் குறித்து எடுத்துக்கூறி வினவியபோது எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்து தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று கூறினார்கள். இருதரப்பும் கேட்டும், இவ்வழக்காவணங்களை ஆராய்ந்தும், எதிரிகளின் மீது எதிரிகளின் மீது இ.த.ச. 294(b), 323, 324 மற்றும் 506(2) ஆவது பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டு வனைந்து வாசித்து, விளக்கிக் கூறி வினவிய போதும் எதிரிகள் அக்குற்றச்சாட்டையும் மறுத்துள்ளார்கள். எனவே, இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சி விசாரணைக்காக உத்தரவிடப்பட்டு அரசுதரப்பு சாட்சிகளின் விசாரணை தொடங்கப்பட்டுள்ளது.

4) இவ்வழக்கில் அரசுதரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.4 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.13 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு சான்றுப்பொருட்கள் அ.சா.பொ.1 முதல் அ.சா.பொ.3 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

## <u>5) அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :-</u>

i) இவ்வழக்கில் **அ.சா.1**, தனது சாட்சியத்தில், “நான் கெந்தபொடிக்கார தெருவில் குடியிருந்து ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். சுமார் 4, 5 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் கீழே விழுந்துவிட்டேன். நான் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்ட போது போலிசார் என்னை விசாரித்தனர். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. போலிசார் என்னை விசாரிக்கவில்லை" என சாட்சியமளித்துள்ளார்.

ii) இவ்வழக்கில் **அ.சா.2**, தனது சாட்சியத்தில், “நான் பள்ளப்பட்டியில் குடியிருந்து ரியல் கூலி வேலை செய்து வருகிறேன். என்ன சம்பவம் நடந்தது என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை" என சாட்சியமளித்துள்ளார்.

iii) இவ்வழக்கில் **அ.சா.3**, தனது சாட்சியத்தில், “நான் பள்ளப்பட்டியில் குடியிருந்து டிரைவர் வேலை செய்து வருகிறேன். என்ன சம்பவம் நடந்தது என்று எனக்கு

தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை" என சாட்சியமளித்துள்ளார்.

iv) இவ்வழக்கில் **அ.சா.4**, தனது சாட்சியத்தில், “நான் கரூர்நகர காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16.03.2019ம் தேதி காலை 15.00 மணிக்கு உதவி ஆய்வாளர் கஸ்துாரி நிலையப் பொறுப்பில் இருந்தபோது கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவலின்படி அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த சபியுல்லாகான் என்பவரிடமிருந்து பெற்று வந்த புகார் வாக்குமூலத்தின்படி நிலையக் குற்ற எண்.206/2019, எதிரிகளின் மீது 294(b), 324 மற்றும் 506(2) இ.த.ச. பிரிவுகளின் படி வழக்கு பதிவு செய்துள்ளார். சபியுல்லாகான் கொடுத்த **அந்த புகார் அ.சா.ஆ.1**, அவர் பதிவு செய்த **அந்த முதல்தகவல் அறிக்கை அ.சா.ஆ.2**. அன்றையதினமே 16.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வைமகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **அந்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4**. மேற்படி சாட்சிகள் முன்னிலையில் உருட்டுக்கட்டை, ரீப்பர்கட்டை, காலி பீர்பாட்டில் ஒன்று ஆகியவற்றை கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றியுள்ளார். **அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.5**. பின்னர் 1 முதல் 6 வரையிலான சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 16.03.2019ம் தேதி 17.47 மணிக்கு இவ்வழக்கின் எதிரிகளை கைதுக்கான காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். இவ்வழக்கில் காயம்பட்ட சபியுல்லாகான், அப்துல்ரகுமான், இர்ஷாத் ஆகியோர்களுக்கு சிகிச்சையளித்து விபத்துபதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் வழங்கிய கரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவர் குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்துபதிவேட்டு அறிக்கைகள் மற்றும் காயச்சான்றிதழ் தயார் செய்துள்ளார். **சபியுல்லாகானின் அந்த விபத்துபதிவேட்டு அறிக்கை மற்றும் காயச்சான்றிதழ் முறையே அ.சா.ஆ.6 மற்றும் 7. அப்துல்ரகுமானின் அந்த விபத்துபதிவேட்டு அறிக்கை மற்றும் காயச்சான்றிதழ் முறையே அ.சா.ஆ.8 மற்றும் 9. இர்ஷாத்தின் அந்த விபத்துபதிவேட்டு அறிக்கை மற்றும் காயச்சான்றிதழ் முறையே அ.சா.ஆ.10 மற்றும் 11**. இவ்வழக்கின் சட்டப்பிரிவினை 294(b), 324 மற்றும் 506(2) இ.த.சவிலிருந்து 294(b), 323, 324 மற்றும் 506(2) இ.த.சவாக மாற்றம் செய்து அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **அந்த சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை அ.சா.ஆ.12**. வழக்கில் கைப்பற்றிய வழக்குச்சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **அந்த படிவம் 91 அ.சா.ஆ.13**. **அந்த உருட்டுக்கட்டை**

**அ.சா.பொ.1. அந்த ரீப்பர்கட்டை அ.சா.பொ.2. அந்த காலி பீர்பட்டில் அ.சா.பொ.3.** இத்துடன் உதவி ஆய்வாளர் தனது புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்" என சாட்சியமளித்துள்ளார். இத்துடன் அரசுதரப்பு சாட்சி விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.

6) அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்குப் பாதகமான சாட்சியங்கள் குறித்து கு.வி.மு.ச. 313(1)(ஆ)-ஆவது பிரிவின்படி எடுத்துக்கூறி வினவியபோது எதிரிகள் அவற்றை பொய்சாட்சி, பொய் வழக்கு என்றார்கள். எதிரிகள் தன்னுடைய தரப்பில் விசாரிக்க சாட்சிகள் எவரும் இல்லை என்றார். இத்துடன் எதிரிகள் தரப்பு சாட்சியம் முடித்துக் கொள்ளப்பட்டது.

7) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இவ்வழக்கில் முன் வைக்கப்பட்ட வாய் மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டது.

8) இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரிகளின் மீது இ.த.ச. 294(b), 323, 324 மற்றும் 506(2) ஆவது பிரிவுகளின் கீழ் சாட்டப்பட்ட குற்றச்சாட்டை அரசுதரப்பால் தகுந்த முறையான ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

**<u>பிரச்சனைக்குரிய தீர்வு</u>**

9) அரசு தரப்பில், கடந்த 16.03.2019 ம் தேதி 13.30 மணிக்கு கரூர் நகர காவல்நிலைய சரகம் கரூர் பேருந்துநிலையம் கீழ்புறம் உள்ள மணீஸ்பாரில் இவ்வழக்கின் சாட்சிகள் 2-3 ஆகியோர்கள் சாப்பிட்டுவிட்டு பில் கொடுத்தபோது தொகை அதிகமாக உள்ளதாக சாட்சி 3 கேட்டபோது இவ்வழக்கின் எதிரி A1 திருவேங்கடம் என்பவர் சாட்சி 3 ஐ கையால் அடித்தும், சாட்சி 3 அவரது உறவினரான சாட்சி 1 சபியுல்லாகான் என்பவருக்கு போன் செய்தும் மேற்படி சாட்சி 1 மணீஸ்பாருக்கு வந்து எதிரி A1 திருவேங்கடத்திடம் ஏன் எனது உறவினர்களிடம் தகராறு செய்து கொண்டு இருக்கிறீர்கள் என்று கேட்டபோது எதிரி A1 சாட்சி 1 ஐப் பார்த்து நீ யாருடா கேட்குறது தேவடியா புண்டாமகனே என்று கெட்ட வார்த்தையால் திட்டியும் கடையில் கிடந்த காலி பீர் பாட்டிலை எடுத்து சாட்சி1 ன் தலையிலும் இடதுகையிலும் அடித்து சொற்பாகாயத்தை ஏற்படுத்தியும் மேற்படி பாரில் வேலை செய்யும் ஆனந்த் என்பவர் சாட்சி3 ஐ மரக்கட்டையால் இடதுகால் பாதத்திலும், கழுத்தின் பின்பகுதியிலும் அடித்தது

சொற்பகாயத்தை ஏற்படுத்தியும், தொடர்ந்து மேற்படி பாரில் வேலை செய்யும் மனோகரன் என்பவர் கடையில் கீழே கிடந்த மரக்கட்டையை எடுத்து சாட்சி2 ஐ இடதுகால் கணுக்காலில் அடித்து சொற்பகாயத்தை ஏற்படுத்தி எதிரிகள் மூவரும் கையில் வைத்திருந்த பீர் பாட்டில் மற்றும் மரக்கட்டைகளை காட்டி சாட்சிகளைப் பார்த்து எங்ககிட்ட பிரச்சினை செய்தால் உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டியுள்ளார்கள். எனவே எதிரி A1, சாட்சி1 ஐ கையில் வைத்திருந்த பீர் பாட்டிலாலும், சாட்சி 3 ஐ கையாலும் அடித்து பீர் பாட்டிலை காட்டி கொலைமிரட்டல் விடுத்த எதிரியின் செய்கையானது சட்டப்பிரிவுகள் இ.த.ச. 294(b), 323, 324 மற்றும் 506(2) ஆவது பிரிவுகளின் படியும், எதிரி A2, சாட்சி 3 ஐ கடையில் கிடந்த மரக்கட்டையால் இடதுகால் பாதத்திலும், கழுத்தின் பின்பகுதியிலும் அடித்து மரக்கட்டையை காட்டி கொலைமிரட்டல் விடுத்த எதிரியின் செய்கையானது சட்டப்பிரிவுகள் இ.த.ச. 324, 506(2) ஆவது பிரிவுகளின் படியும் எதிரி A3, சாட்சி 2 ஐ கடையில் கிடந்த மரக்கட்டையால் இடதுகணுக்காலில் அடித்து மரக்கட்டையை காட்டி கொலைமிரட்டல் விடுத்த எதிரியின் செய்கையானது சட்டப்பிரிவுகள் இ.த.ச. 324, 506(2) ஆவது பிரிவுகளின் படியும் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக கரூர்நகர காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் காவல் நிலைய குற்ற எண்.206/2019 ல் எதிரிகளின் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே அரசு தரப்பில் சுமத்தப்பட்ட குற்றத்தினை நிரூபிக்கும் முகமாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் மற்றும் இருதரப்பு வாதங்களையும் பின்வருமாறு பரிசீலிக்கப்பட்டது.

10) இவ்வழக்கின் பாதிக்கப்பட்டவரும் நிகழ்வுநிலை புகார்தாரருமான அ.சா.1 தனது முதல் விசாரணை சாட்சியத்தில், “நான் கெந்தபொடிக்கார தெருவில் குடியிருந்து ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். சுமார் 4, 5 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் கீழே விழுந்துவிட்டேன். நான் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்ட போது போலிசார் என்னை விசாரித்தனர். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. போலிசார் என்னை விசாரிக்கவில்லை" என்று கூறி பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்.

11) மேற்படி இவ்வழக்கின் பாதிக்கப்பட்டவரும் நிகழ்வுநிலை புகார்தாரருமான அ.சா.1 ன் சாட்சியத்தை ஆராய்கையில், அவர் தனது முதல் விசாரணை சாட்சியத்தில், சுமார் 4, 5 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் கீழே விழுந்துவிட்டேன் என்றும் தான் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்ட போது போலிசார் தன்னை

விசாரித்தனர் என்றும் தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையது அல்ல என்றும் போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்று கூறி பிறழ்சாட்சியம் அளித்துள்ளநிலையில் ஆஜர் எதிரிகள்தான் சம்பவத்தின் போது அ.சா.1 ஐ அடித்தார்களா என்பதும் அ.சா.ஆ.1 புகார் மனுவை அ.சா.1 தான் எழுதிக்கொடுத்தாரா என்பதும் சந்தேகத்திற்கிடமாக உள்ளது.

12) மேலும் இவ்வழக்கின் பாதிக்கப்பட்டவரும், சம்பவத்தின் போது அ.சா.1 னுடன் உடனிருந்ததாகவும் விசாரிக்கப்பட்ட அ.சா.2 தனது முதல் விசாரணை சாட்சியத்தில், “நான் பள்ளப்பட்டியில் குடியிருந்து ரியல் கூலி வேலை செய்து வருகிறேன். என்ன சம்பவம் நடந்தது என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை" என்று கூறி பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்.

13) மேலும் இவ்வழக்கின் பாதிக்கப்பட்டவரும், சம்பவத்தின் போது அ.சா.1 னுடன் உடனிருந்ததாகவும் விசாரிக்கப்பட்ட மற்றொரு சாட்சியான அ.சா.3 தனது முதல் விசாரணை சாட்சியத்தில், “நான் பள்ளப்பட்டியில் குடியிருந்து டிரைவர் வேலை செய்து வருகிறேன். என்ன சம்பவம் நடந்தது என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை" என்று கூறி பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்.

14) மேற்படி அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோரின் சாட்சியங்களை ஒருசேர ஆராய்கையில், இருவரும் தங்களது முதல்விசாரணை சாட்சியங்களில் என்ன சம்பவம் நடந்தது என்று தங்களுக்கு தெரியாது என்றும் போலிசார் தங்களை விசாரிக்கவில்லை என்றும் கூறி பிறழ்சாட்சியம் அளித்துள்ளநிலையில் ஆஜர் எதிரிகள்தான் சம்பவத்தின் போது அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.3 ஐ அடித்தார்களா என்பதில் பலத்த சந்தேகம் ஏற்படுகிறது.

15) மேற்படி, இவ்வழக்கின் பாதிக்கப்பட்டவரும், நிகழ்வுநிலை புகார்தாரருமான அ.சா.1 சபியுல்லாகான் மற்றும் சம்பவத்தின் உடனிருந்ததும், சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுமான அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகிய அனைவரும் பிறழ் சாட்சிகளாக ஆகிவிட்ட சூழ்நிலையில் மற்ற சாட்சிகளை விசாரிப்பதில் பயனில்லை என்பதால் மற்ற சாட்சிகளை விசாரிப்பதிலிருந்து அரசு தரப்பில் விலக்கு செய்யப்பட்டுள்ளனர். மேலும் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்ட சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.பத்மசீலன், இவ்வழக்கு குறித்து புலன்

விசாரணை செய்த ஆவணங்களின் அடிப்படையில் எதிரிகளின் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ள போதிலும், புகார்தாரரே சுமார் 4, 5 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் கீழே விழுந்துவிட்டேன் என்றும் தான் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்ட போது போலிசார் தன்னை விசாரித்தனர் என்றும் தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் தன்னுடையது அல்ல என்றும் போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் கூறியுள்ளார். மேலும் சம்பவத்தின் போது அ.சா.1 னுடன் இருந்ததும், சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுமான அ.சா.2 மற்றும் அ.சா.3 இருவரும் தங்களது முதல்விசாரணை சாட்சியங்களில், என்ன சம்பவம் நடந்தது என்று தங்களுக்கு தெரியாது என்றும் போலிசார் தங்களை விசாரிக்கவில்லை என்றும் கூறி பிறழ்சாட்சியம் அளித்துள்ளனர். மேற்படி இவ்வழக்கின் பாதிக்கப்பட்டவர்களான அ.சா.1, அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகிய அனைவரும் பிறழ் சாட்சிகளாக ஆகிய சூழ்நிலையில், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரிகள் குற்றவாளிகள் என முடிவு செய்ய இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே,எதிரிகள் மீது அரசு தரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என முடிவு செய்து, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை விடுதலை செய்யலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

16) முடிவில், மேற்படி அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் மற்றும் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களில் இருந்தும் எதிரிகளின் மீது சாட்டப்பட்ட இ.த.ச. 294(b), 323, 324 மற்றும் 506(2) ஆவது பிரிவுகளின் கீழ் படியான குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபிக்கப்படவில்லை என முடிவு கண்டு சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து, எதிரிகளை கு.வி.மு.ச. 248(1)-ஆவது பிரிவின்படி **விடுதலை செய்து** இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

17) இவ்வழக்கில் வழக்குச் சொத்தாக குறியீடு செய்யப்பட்டுள்ள **ஆர்.பி.எண். 217/2019** ல் **அ.சா.பொ.1** ல் கண்டுள்ள சுமார் 86 செ.மீ நீளமுள்ள உருட்டுக்கட்டை-1, **அ.சா.பொ.2** ல் கண்டுள்ள சுமார் 82 செ.மீ நீளமுள்ள ரீப்பர்கட்டை-1 மற்றும் **அ.சா.பொ.3** ல் கண்டுள்ள சுமார் 650 ML கொள்ளளவு கொண்ட Kingfisher காலி பீர்பாட்டில்-1 ஆகியவற்றினை மேல்முறையீட்டு காலக்கெடுவிற்கு பின்னிட்டு உரிய முறையில் அழிக்கவும் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து - தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் வடிக்கப்பட்டு, பின்னர் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 16.04.2026 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

BARATH KUMAR
Digitally signed by BARATH KUMAR
Date: 2026.04.16 18:39:43 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

**அரசுதரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள் :-**

| | |
|---|---|
| அ.சா.1 | சபியுல்லாகான் |
| அ.சா.2 | அப்துல்ரகுமான் |
| அ.சா.3 | இர்ஷாத் |
| அ.சா.4 | திரு. பத்மசீலன், சிறப்பு உதவி ஆய்வாளர் |

**அரசுதரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள்:-**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.2 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.4 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.6 | சபியுல்லாகானின் விபத்துபதிவேடு |
| அ.சா.ஆ.7 | சபியுல்லாகானின் காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.8 | அப்துல்ரகுமானின் விபத்துபதிவேடு |
| அ.சா.ஆ.9 | அப்துல்ரகுமானின் காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.10 | இர்ஷாத்தின் விபத்துபதிவேடு |
| அ.சா.ஆ.11 | இர்ஷாத்தின் காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.12 | சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை |
| அ.சா.ஆ.13 | படிவம் 91 |

**அரசுதரப்பு சான்று பொருள்கள் :-**

| | |
|---|---|
| **அ.சா.பொ.1** | சுமார் 86 செ.மீ நீளமுள்ள உருட்டுக்கட்டை-1<br>**(ஆர்.பி.எண். 217/2019)** |

| | |
|---|---|
| **அ.சா.பொ.2** | சுமார் 82 செ.மீ நீளமுள்ள ரீப்பர்கட்டை-1<br>**(ஆர்.பி.எண். 217/2019)** |
| **அ.சா.பொ.3** | சுமார் 650 ML கொள்ளளவு கொண்ட Kingfisher காலி பீர்பாட்டில்-1<br>**(ஆர்.பி.எண். 217/2019)** |

**<u>எதிரிகள் தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள், சான்று பொருள்கள் :-</u>**

**இல்லை**

BARATH KUMAR

Digitally signed by BARATH KUMAR
Date: 2026.04.16 18:39:56 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

| | | |
|---|---|---|
| 16.04.2026<br><br>**சிசி.எண்.258/2024**<br><br>எதிரிகள் ஆஜர். இவ்வழக்கில் முன் வைக்கப் பட்ட வாய் மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டது.<br><br>தீர்ப்பு அவையறியப் பகரப்பட்டது.<br><br>முடிவில், மேற்படி அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் மற்றும் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களில் இருந்தும் எதிரிகளின் மீது சாட்டப்பட்ட இ.த.ச. 294(b), 323, 324 மற்றும் 506(2) ஆவது பிரிவுகளின் கீழ் படியான குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என முடிவு கண்டு சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து, எதிரிகளை கு.வி.மு.ச. 248(1)-ஆவது பிரிவின்படி **விடுதலை செய்து** இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.<br><br>இவ்வழக்கில் வழக்குச் சொத்தாக குறியீடு செய்யப்பட்டுள்ள **ஆர்.பி.எண். 217/2019** ல் **அ.சா.பொ.1** ல் கண்டுள்ள சுமார் 86 செ.மீ நீளமுள்ள உருட்டுக்கட்டை-1, **அ.சா.பொ.2** ல் கண்டுள்ள சுமார் 82 செ.மீ நீளமுள்ள ரீப்பர்கட்டை-1 மற்றும் **அ.சா.பொ.3** ல் கண்டுள்ள சுமார் 650 ML கொள்ளளவு கொண்ட Kingfisher காலி பீர்பாட்டில்-1 ஆகியவற்றினை மேல்முறையீட்டு காலக்கெடுவிற்கு பின்னிட்டு உரிய முறையில் அழிக்கவும் உத்தரவிடப்படுகிறது.<br><br>BARATH KUMAR Digitally signed by BARATH KUMAR Date: 2026.04.16 18:40:08 +0530<br><br>**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்.** | | |